விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்–12.00 p.m.
விசாரணை முடிக்கப்பட்ட நேரம் –12.25 p.m.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.I, Mettur**

**Case No : CC. 350/2023**

**Prosecution witness : எ.ம.சா.1** **Date : 20.09.2024**

| | |
|---|---|
| **Name : வினோத்** | **Taluk : சென்னை** |
| **Father Name : ராமசாமி** | **Calling : பைக் டேக்ஸி** |
| **Village : சாலிகிராமம்** | **Age : 33** |

**(Accused present)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நீதிமன்றத்தில் இருந்து கிடைக்கப்பெற்ற அழைப்பானை பேரில் சாட்சியம் அளிக்க வந்திருக்கிறேன். நான் எங்கு குடியிருக்கிறேன் என்றால் சென்னையில் உள்ளேன். நான் சென்னையில் 3, 4 வருடமாக தங்கி வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கின் எதிரி எனக்கு அப்பா. இந்த வழக்கின் புகார்தாரர் தெரியுமா என்றால் தெரியாது. வ.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது அல்ல. என் முன்பாக அது எழுதப்படவில்லை. வ.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள எழுத்தால் எழுதப்பட்டது, தேதி மற்றும் தொகை அனைத்தும் என்னால் எழுதப்படவில்லை. இந்த காசோலை வழக்கு பற்றிய விவரம் எனக்கு தெரியாது.

**குறுக்கு விசாரணை**

எனக்கு 33 வயதாகிறது. எனக்கு இன்னம் திருமணம் ஆகவில்லை. நான் 2013 ம் ஆண்டு B.E. Mectranics படித்து முடித்துள்ளேன். என் அப்பா ராமாசமி சிவில் கான்ட்ராக்ட் ஒப்பந்த வேலைகள் 4, 5 வருடங்களுக்கு முன்பு செய்து வந்தார். எந்த ஆண்டு முதல் சிவில் கான்ட்ராக்ட் ஒப்பந்த

வேலைகளை குறிப்பாக செய்யவில்லை என்று சொல்லமுடியுமா என்றால் முடியாது. இன்று வரை என் அப்பா சிவில் கான்ட்ராக்ட் ஒப்பந்த வேலைகள் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. அதுமட்டுமல்லாமல் சேலம் மற்றும் ஈரோடு பகுதிகளில் ரியல் எஸ்டேட் தொழில் நாளாது வரை என் அப்பா செய்து வருகிறார் என்றால் சரியல்ல. ஈரோடு மாவட்டம் பூதப்பாடி கிராமத்தில் ஜெயம் செகோ பேக்கடரி கூட்டாண்மை தொழில் நிறுவனம் நடத்தி வந்து அதில் Managing Partner நிர்வாகம் செய்து வந்தார் என்றால் சரிதான். என் தாயார் பெயர் ஜானகி. என்னுடைய அம்மாவுடைய அப்பா ஊர் கொளத்தூர் கோட்டுமடுவு என்றால் சரிதான். நான் அங்கு போக வர உள்ளேனா என்றால் தற்போது இல்லை. நான் அங்கு சென்று 5 ஆண்டுகள் ஆகிவிட்டது. என் அப்பாவின் பூர்விகம் பழங்கோட்டை கிராமம் என்றால் சரிதான். அங்கு எங்களுக்கு அப்பாவிற்கு சொந்தமாக 15 ஏக்கர் நிலம் உள்ளதா என்றால் என் தாத்தா பாட்டிக்கு உண்டு. என் தாத்தா கருப்பண்ணனுக்கு ஒரே மகன் தான். ஒரு தங்கை உண்டு. புகாரில் கூறியுள்ள விலசாத்தில் தான் என் தந்தை நிரந்தரமாக வசித்து வருகிறார் என்றால் சரிதான். நான் சென்னையில் இருக்கிறேன். இந்த வழக்கில் சாட்சி சொல்வதற்கு என் அப்பா தான் கூட்டி வந்தார் என்றால் நீதிமன்றத்தில் அழைப்பானை வந்தது. நேற்று காலை தான் வந்தது. நேற்று காலை வரை இந்த வழக்கு சம்மந்தமான எந்த விவரமும் தெரியாது. அழைப்பானை வந்த பிறகு என் அப்பாவிடம் கேட்டு விவரத்தை தெரிந்துக்கொண்டேன். புகாரில் உள்ள சங்கதிகள் தெரியுமா என்றால் வழக்கு போட்ட விவரம் மட்டும் தான் தெரியும் மற்ற விவரங்கள் தெரியாது. நான் சென்னையில் தங்கியிருந்து நிர்வனத்தில் பணியாற்றுவது சம்மந்தமாக எந்தவித ஆவணங்களும் நீதிமன்றத்தில் தாக்கல்

செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு ஆங்கிலம் எழுத, படிக்க தெரியுமா என்றால் தெரியும். புகாரில் கூறியுள்ள என் அப்பாவின் முகவரிக்கு தான் நீதிமன்றத்திலிருந்து அழைப்பானை வந்தது என்றால் சரிதான். நான் என் அப்பாகூட தங்கி அவருடன் தொழில் செய்து வருவதாகவும், சென்னையில் தங்கி இருந்து பணிபுரிவதாக பொய்யாக சாட்சியாக அளிக்கிறேன் என்றும், அதனால் தான் வேலை நாட்களிலும் கருமலைக்கூடலில் அழைப்பானை பெற்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளேன் என்றால் சரியல்ல. (**எனக்கு கிடைக்கப்பெற்ற அழைப்பானை மற்றும் அஞ்சல் உறை வ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** காசோலையில் உள்ள கையெழுத்து என் அப்பாவின் கையெழுத்தா என்றால் அதேபோல் தான் இருக்கும் உறுதியாக சொல்லமுடியாது. நான் தான் 12.04.2023 ம் தேதி என் வீட்டில் காசோலை பூர்த்தி செய்து கொடுத்தேன் என்றும் அதனை என் அப்பா கையெழுத்து இட்டு புகார்தாரரிடம் கொடுத்தார் என்றும் தற்போது வழக்கிலிருந்து என் அப்பாவை காப்பாற்றும் போருட்டு என் அப்பாவிற்கு ஆதராவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>விசாரணை முடிக்கப்பட்டது.</u>

**ஒம்/–அ.க.பத்மபிரியா,**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1,**
**மேட்டூர்.**